REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 7உ வெள்ளி (22—11—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 8உ சனி (23—11—57) [இதழ் 138

முடியாதது முடிகிறதாம்!

கிருமிகளைக் கொல்லும் புதிய மருந்து ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. 'ஸ்டான்டின்' என்னும் அந்த மருந்து இப்போது, டாக்டர்களுக்குக் கிடைக்கும். கிருமி வளர்ச்சியைத் தடுப்பதோடு மட்டும் அமையாமல், அதனை அடியோடு அழித்துவிடும் முதல் கிருமி மருந்து இதுவே என்று, அதனை உற்பத்தி செய்த சிகாகோவிலுள்ள சோதனைக்கூடம் அறிவிக்கிறது. இதற்குமுன் உற்பத்தி செய்துள்ள கிருமி மருந்துகளால் முடியாததை இந்த மருந்து செய்கிறது என்பதைச் சோதனைமூலம் கண்டறிந்தார்களாம்!

நெஞ்சத்தைத் தொட்டுப் பார்த்து எடுத்தது எங்கள் முடிவு

புலிகளுக்கு நடுவில் புள்ளி மான்களைப்போல நின்று சட்டத்தை எதிர்த்தோம்

காங்கிரசு சர்வாதிகாரத்தை மாய்க்க 15 பேர் பணி பயன்படுகிறது

நுங்கம்பாக்கத்தில் அண்ணா விளக்கவுரை

கடந்த 17—11—57 மாலை, சென்னை நுங்கம்பாக்கத்தில் நடந்த சமூக ஊழியர் மன்ற விழாவில் அண்ணா அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய உரையின் பிற்பகுதி இங்கு தரப்படுகிறது (முற்பகுதி ஏற்கனவே வெளியாகியுள்ளது) :—

"எந்தக் காரியத்தைத் துச்சமென அமைச்சர் கருதினாரோ, அதைப்பற்றிப் பிறகு உணர்ந்து அதற்கு மதிப்புத்தர முன்வந்தார். அவர்கள் ஓட்டை மட்டுமே நம்பி உண்மையைத் துச்சமெனத் தள்ளுகிறார்கள்.

"நாங்கள் சட்டசபையில் பேசினால்—முன்பெல்லாம் நம்மை சுப்பிரமணியம் காரசாரமாகக் கண்டிப்பாரே, அப்படியெல்லாம் இப்பொழுது சட்டசபையில் கண்டிப்பதில்லை. எங்கள் பேச்சிலே தவறு காணவும் முடிவதில்லை. இதுநாள்வரை காங்கிரஸ் அமைச்சர்கள்தான் தங்கள் பேச்சை வாபஸ் வாங்கியிருக்கிறார்களே தவிர, நாங்களல்ல!

"நிதியமைச்சர் ஒருசமயம், பேசிய பேச்சை கழக உறுப்பினர் ஆட்சேபித்தபோது, தனது அந்தப் பேச்சை சட்டசபைப் புத்தகத்திலே ஏற்றவேண்டாம் என்று சபாநாயகரைப் பார்த்துக் கேட்டுக்கொண்டார்; தான் பேசிய பேச்சு சட்டசபைப் புத்தகத்தில் இடம்பெற இலாயக்கற்றது—தகுதியற்றது என்பதை அவரே எடுத்துக்கூறி, சபாநாயகரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்—'சட்ட புத்தகத்திலே அதைச் சேர்க்கவேண்டாம்'—என்று! இதிலிருந்து, 15 பேராக இருக்கும்போதே எத்தகைய மதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை உணரவேண்டும்.

"இதை எதற்குச் சொல்லுகிறேன் என்றால், 15 பேர் நடத்திக்காட்டும் காரியம், காங்கிரஸ்காரரின் பிடிவாதத்தை—பேய்க்குணத்தை மாற்றி, சர்வாதிகாரத்தை மாய்க்க உதவுகிறது. நாட்டு மக்களின் மனக்குமுறலை கொட்டிக் கொள்ள முடிகிறது.

"அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் சொன்னார்—'காமராசர் பெரியாரைப் போய்ப் பார்க்கமாட்டார்'—என்று! அழுத்தம் திருத்தமாக அதைச் சொன்னார்.

"தேர்தலுக்குமுன்னால் 'காமராசர் இங்குதான் உட்கார்ந்திருந்தார்; இந்த நாற்காலியில்தான் அமர்ந்திருந்தார்'—என்றெல்லாம் சொல்லி, அந்த இடத்திலேயெல்லாம் திராவிடர் கழகத் தோழர்கள் பூசை செய்யக்கூடிய அளவுக்கு பக்தி கொண்டிருந்தார்கள்—இன்னும் இருக்கிறார்கள். தேர்தலுக்குப் பிறகு, காமராசர் ஏன் போய் பெரியாரைச் சந்திக்கவில்லை? தேர்தலுக்குப் பிறகு அவர் தேவையில்லை—எனவே, சந்திக்கவில்லை.

"முரட்டுக் கணவன்மார்கள், தேவைப்பட்ட நேரத்தில் உள்ளே சென்று மனைவியிடம் பேசி, கொஞ்சிவிட்டு தெருத் திண்ணையிலே வந்து படுத்துக்கொள்கிறார்களே, அவர்களுக்கும்—காமராசருக்கும் என்ன வித்தியாசம்?

"காமராசர் பெரியாரைச் சந்திக்க வேண்டுமென்று நான் சொன்னதற்கு, அமைச்சர் சொன்ன பதில் வெட்கப்படக்கூடியதாகும். 'பெரியாருக்குக் காமராசர் மீது ஆசை; ஆனால் காமராசருக்குப் பெரியார் மீது ஆசை இல்லை' என்றார், அவர்; இதற்கு என்ன பொருள்?

"அதன் பிறகுதான் அவர் சொன்னார்—'அண்ணாதுரையே பெரியாரைப் போய்ப் பார்த்து, சமரசம் செய்ய வேண்டும்'—என்று!

"நான் போகமாட்டேன் என்று சொல்லவில்லை; பெரியாரிடத்திலே இன்று தொத்திக்கொண்டிருக்கும் பிள்ளைகளும், தத்துப்பிள்ளைகளும், நான் அவர் வீட்டுக்குள்ளே நுழைந்தால் வழி விடுவார்கள் என்பது எனக்குத் தெரியும்; சமரசம் பேசவும் முடியும்; ஆனால், அதுவரை சட்டத்தை நிறுத்திவைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன். அதைக் கேட்டதும் அமைச்சருக்கு, என்ன செய்வதென்று தோன்றவில்லை; சட்டத்தை நிறுத்திவைக்கவும் முடியவில்லை; இக்கட்டான நிலைமை ஏற்பட்டது அவருக்கு! காரணம், சட்டசபை, இப்படிப்பட்ட கட்டங்களைக் கண்டதில்லை; சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது; காரணம், சட்டத்தை நிறுத்திவைக்கும் அளவுக்கு என் கரத்துக்கு நீங்கள் வலிவு தரவில்லை. வலிவு தரப்பட்டிருந்தால் அதற்கான 'திருவிளையாடலை'யும் சட்டசபையில் நடத்திக் காட்டியிருப்பேன். 'மாவுக்கேற்ற பணியாரம்'; என்பதுபோல, எண்ணிக்கைக்கு ஏற்றபடிதான், எண்ணம், இன்றைய சனநாயகத்தில்!

"நான் நெஞ்சத் தூய்மையோடு சொல்லிக்கொள்கிறேன்—15 பேருக்குமேல் அதிகம் பேர் சட்டசபைக்கு வந்திருந்தால் இந்தச் சட்டம் வந்திருக்காது.

"இந்தச் சட்டத்தை, எங்களைத் தவிர வேறு எந்தக் கட்சியும் எதிர்க்கவில்லை. முதுகுளத்தூர் பிரச்சினையை வைத்துக் கொண்டு அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தவர்கள்கூட, இந்தப் பிரச்சினையில் ஆட்சியாளருடன் சேர்ந்துகொண்டார்கள்; கம்யூனிஸ்டுக் கட்சிக்காரர்கள் இந்தச் சட்டத்தை ஆதரித்தார்கள்; சோஷலிஸ்டுகள், பி. சோ. கட்சியினர், சுயேச்சைகள் அனைவரும் ஆதரித்துப் பேசினர். 'ஆ, தேசியக் கொடியைக் கொளுத்துவதா? ஐயய்யோ, காந்தி படத்தையா கொளுத்துவது? விடக்கூடாது இவர்களை; கடுமையான தண்டனையளிக்க வேண்டும்'—என்று பேசினர்; 'கொளுத்துபவர்களுக்கு 3 ஆண்டு தண்டனை போதாது; 30 ஆண்டு வேண்டும்'—என்றனர்.

"சர்க்கஸ்காரர்கள் புலிகளுக்கு நடுவே புள்ளி மான்களை நிறுத்துவதுபோல, நாங்கள் மட்டுமே அத்தனைப்பேருக்கும் மத்தியில் நின்று சட்டத்தை எதிர்த்தோம்.

"எனக்கே சந்தேகம், வந்தது—'எப்படி நமக்கு இந்தத் தைரியம் வந்தது'—என்று! நான் பல தடவை சொல்லியிருக்கிறேன்—'நம் கட்சியிலேயே கடைசி பலவீனன் நான்தான்'—என்று!

"நான் பேசும்போது, அமைச்சர் சொன்னார்—'நெஞ்சைத் திறந்துபேச வேண்டும்'—என்று! அப்பொழுது, என் சட்டையின் பொத்தான்கள் எல்லாம் கழன்று இருந்ததால், நான் சட்டையை நீக்கிவிட்டு என் மார்பைத் தொட்டுக்

(4-ம் பக்கம் பார்க்க)

'அமெரிக்க அரிசி வேண்டாம்'

கேரள சர்க்கார் மறுப்பு

மக்கள்சபையில் தகவல்

புதுடில்லி, நவ. 21—

கேரள மாநில சர்க்கார், அமெரிக்க அரிசி தங்களுக்குத் தேவை இல்லை என்று கூறிவிட்டதாக மக்கள்சபையில், உதவி உணவு மந்திரி தாமஸ் தெரிவித்தார்.

ஒரு தோழர் எழுந்து, "அமெரிக்க அரிசி 'தர'க் குறைவாகவும், சமைத்தபின் கூழ்போல் ஒட்டுவதாகவும் இருப்பது உண்மை தானா?" என்று கேட்டபோது, 'அமெரிக்க அரிசியைச் சமைப்பதற்கு கொஞ்சம் திறமை தேவைப்படலாம்' என்று, சிரிப்புக்கிடையே அவர் கூறியிருக்கிறார்!

ஐந்து ஆண்டுகளுக்குள் இந்தி கற்றுக்கொள்ள வேண்டுமாம்!

மக்கள் சபை உறுப்பினர்களுக்கு தலைவரின் யோசனை

புதுடில்லி, நவ. 21—

இன்னும் ஐந்தாண்டுகளுக்குள் மக்கள்சபை இந்தி மொழி கற்றுக்கொள்ள வேண்டும் என்று சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் யோசனை கூறினாராம்!

கேரளத்தைச் சேர்ந்த ஈஸ்வர அய்யர் என்ற உறுப்பினர், இந்தியில் தரப்படும் பதில்களுக்கு ஆங்கில மொழி பெயர்ப்புக் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாக புகார் செய்தபோது, அவர், 'சபை உறுப்பினர்கள், தாங்களாகவே ஒரு ஐந்தாண்டுத் திட்டம் தயாரித்துக்கொண்டு இந்தி மொழியில் பயிற்சி பெற்றுக்கொள்ள வேண்டும்' என்று கூறினாராம்!

வெட்கப்படுதற்குரியது! அவமானகரமானது!!

புதுடில்லி, நவ. 21—

"இந்தியாவில் இப்போது உணவு உற்பத்தி விகிதம் மிக மிகக் குறைவானது; உலகத்திலேயே மிகக் குறைந்த விகிதம் இந்தியாவினுடையதுதான்; இவ்வளவு குறைவாயிருப்பது, நமக்கெல்லாம் வெட்கம் தருவது—அவமானகரமானது!

"இதன் விளைவாக, ஏராளமான பொருட் செலவில் உணவு இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது; இதனால் அன்னியச் செலாவணிக் கஷ்டம் பெருகுகிறது" என்று, பண்டித நேரு, மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

சேரி ஒழிப்புக்கு ரூ. 60 இலட்சம்

சென்னை சர்க்கார் அறிவிப்பு

1958—59-ம் ஆண்டில், சேரி ஒழிப்புக்காக சென்னை அரசாங்கம் ரூ. 60 இலட்சம் ஒதுக்கியிருப்பதாக சென்னை நகரசபைத் தலைவருக்கும், நகர அபிவிருத்தி நிறுவனத்திற்கும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதில் ரூ. 35 இலட்சம் கடனாகத் தரப்படுகிறது.

தமிழக — ஆந்திர மாநிலங்களின் புதியஎல்லை

ஏப்ரலில் சட்டம் வரும்

சென்னை, நவ. 21—

ஆந்திர—தமிழக எல்லை பிரச்சினை சம்பந்தமாக படாஸ்கர் தந்த தீர்ப்பினை அமுல் செய்வதற்கான சட்டம், மக்கள்சபையில், வரும் ஏப்ரல் திங்களில் கொண்டுவரப்படலாம் எனத் தெரியவருகிறது.

மக்கள்சபை அதுபற்றிச் சட்டம் இயற்றியபின்புதான் பிரதேச மாற்றங்கள் நிகழும் என்றும், உத்தேசச் சட்டம் இரு மாநில சட்டசபைகளிலும் விவாதிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

சில பிரதேசங்களுக்கு ஏற்படும் இந்த மாறுதல், சில சட்டசபை உறுப்பினர்களைப் பாதிக்கும் என்றும், இவர்கள் இப்போதிருக்கும் சட்டசபைகளிலேயே பதவி வகிக்கலாம் என்றும், அடுத்த பொதுத் தேர்தல்வரை இந்த ஏற்பாடு நீடிக்கும்வண்ணம் உத்தேசச் சட்டத்திலேயே வகை செய்துவிடலாம் என்றும் யோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

அலங்கோல திட்டத்திற்கு தீனி போட!

ஏழைஎளியோர் மேலும் வரிச்சுமை தாங்க நேரிடுமாம்!

நவீன 'கிருஷ்ண பரமாத்மா'வின் கருணைகடாட்சம்

புதுடில்லி, நவ. 21—

அலங்கோலமான ஐந்தாண்டுத் திட்டத்தினை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, மக்கள்மீது மேலும் புதிய வரிச் சுமைகளைத் திணிக்கப்போவதாக நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் சூசகமாகத் தெரிவித்திருக்கிறார்.

எஞ்சிய திட்டக் காலத்தில், மாநிலங்கள் மேலும் புதிய பெரிய வரிகளை விதிக்கும் என்றும் மத்திய சர்க்காரும் தன் பங்கிற்கு சில வரிகளை விதிக்கும் என்றும் அவர் எதிர்பார்க்கிறாராம்!

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 22—11—57 வெள்ளி

நவீன கான்யூட் அரசன்

ஆங்கிலக் கவிஞர் ஒருவர் 'கான்யூட் அரசனும் அலைகளும்' என்ற கவிதை ஒன்றை இயற்றியுள்ளார். அக்கவிதையில் இடம் பெற்றுள்ள அரசனைச் சூழ்ந்திருந்தபிரமுகர்கள், அரசனின் ஆற்றலை மிகைப்படப்புகழ்ந்து பாராட்டி வந்தனர். அரசனும் அதை மெய்யென நம்பினான். தனக் கிருப்பதாகக் கூறப்பட்ட பேராற்றல் தன்னிடம் இருப்பதாகவும் அவன் தீர்மானித்துக் கொண்டான்.

ஞாயிறை கட்டளை இட்டால் திசைமாறி தோன்றுவான்—காற்றே வீசாதே என்றால் காற்று செயலற்றுப்போகும். கடல் அலைகளை அசையாதிருந்திடுக என அரசன் கட்டளையிடத் துணிந்தால், அவ்வலைகள் அரசன் ஆணைக்கு அடிபணிந்துவிடும் என்றெல்லாம் கான்யூட் அரசனின் ஆற்றல் பற்றி, அவனைச் சூழ்ந்திருந்த அமைச்சர்கள் அடுத்தடுத்து எடுத்துரைத்துவந்தனர். தன்னிடம் இருப்பதாகக் கூறப்படும் ஆற்றல்தனக்குண்டா என்பதை பரீட்சித்துவிட அரசனும் ஒரு நாள் துணிந்துவிட்டான். கடல் நீர் அருகில், அரசன் ஏவல்படி, அரியாசனமும் போடப்பட்டது. அரசனும் வீரம் வெளிப்பட அவ்வரியாசனத்தில் அமர்ந்தான். அமைச்சர்களும் மற்ற ஏவலர்களும் புடைசூழ நின்றனர்.

அரசன் ஆணை இட்டான் 'அலைகளே! என் பாதங்களைத் தீண்டாதீர்' என்று. ஆனால் அலைகளோ அரசனின் பாதங்களை மட்டும் அல்ல, உடலையே நனைத்துவிட்டுத் திரும்பின!

கான்யூட் மன்னன் வெட்கினான்! தலை கவிழ்ந்தான்! அரசனுக்கு இல்லாத ஆற்றலை அவனிடம் இருப்பதாகச் சொல்லிவந்த அமைச்சர்களோ, அரசனுக்கு முன்னரே, வெட்கத்தாலும் அச்சத்தாலும் தலை கவிழ்ந்து கிடந்தனர். கான்யூட் மன்னன் தன்னறிவு பெற்றான்! இதுதான் ஆங்கிலக் கவிஞர் தீட்டிக்காட்டியுள்ள கான்யூட் அரசர் கதை.

ஆங்கிலக் கவிஞர் ஒருவரின் கற்பனையில் தோன்றிய கான்யூட் அரசரையும் தோற்கடித்துவிடக்கூடிய நிலையில், இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் நவீன கான்யூட் அரசராகக் காட்சி தந்துவருகிறார். அவருடைய செயலும் பேச்சும் கான்யூட் அரசரைத்தான் நமது நினைவுக்குக் கொண்டுவருவனவாக அமைந்திருக்கின்றன.

மற்றப் பெருநாட்டுப்பிரதமர்களுக்கு இல்லாத தனிப்பெரும் ஆற்றல் இந்தியப் பிரதமரிடம் மட்டுமே இருப்பதாக, பிற நாட்டு சூதுமதியினர் கதை கட்டிவிட்டனர் — இன்றும் அதைத் திறம்படச் செய்தும் வருகின்றனர்.

அந்த வீண் புகழ்ச்சியின் உள்ளடக்கம் தெரிந்தோ தெரியாமலோ இந்தியப் பிரதமரும், அப்புகழ்ச் சொற்களுக்குத் தம்மை அடிமைப்படுத்திக் கொண்டார். அந்த நிலையிலிருந்தே தம்மைத்தாமே மதிப்பிட்டுக்கொள்ளவும் அவர் பழகிவிட்டார். இன்று, அது, அவரைப் பீடித்துள்ள, தீர்க்க முடியாத பெரு நோயாகவும், முடிந்துவிட்டது.

இந்தியப் பிரதமர் தம்மைப்பற்றி மதிப்பிட்டுக் கொண்டுள்ளது போன்றே, இந்தியத் துணைக்கண்டத்து மக்களில் பலரும்கருதி, அவரை புகழ்ந்து பாராட்டலாயினர். அப்பாராட்டும், இந்தியப் பிரதமருக்கு இருந்த பெரும் பிணியைப் வலிமையுள்ளதாகச் செய்துவிட்டது.

இதன் விளைவு—நவீன கான்யூட் அரசராக இந்தியப் பிரதமர் காட்சியளிப்பதேயாகும்.

தாம் எண்ணியபடி—ஏவியபடி—நாடு இயங்காதது கண்டு, நவீன கான்யூட் அரசருக்கு ஆத்திரம் வருகிறது.

தாம் கருதியபடி—கட்டளையிட்டவழி—நாட்டு மக்கள் செயல்படாதது பார்த்து—நவீன கான்யூட் அரசருக்கு கோபம் கொப்பளித்துக் கொண்டு கிளம்புகிறது.

மக்கள் முயற்சி குன்றிவிட்டனர்—மக்கள் சோம்பிக் கிடக்கின்றனர்—பிறர் துணையையே நாடிக்கிடக்கின்றனர் என்றெல்லாம் மக்கள்மீது புதிய கான்யூட் அரசர் தாக்குதல் நடத்தத் துவங்கியுள்ளார்.

இந்த அவல நிலையைத் தவிர்க்க—இந்த முயற்சியின்மையை முறியடிக்க — சுயமுயற்சி இயக்கம் ஒன்றைத் துவங்க வேண்டும் என அறிவுரை கூறுகின்ற அளவுக்கு—இந்த நவீன அரசரின் ஏமாற்றம் சென்று நிற்கிறது.

'சுயமுயற்சி இயக்கம்' என்ன, இன்னும் எத்தனை இயக்கங்களை வேண்டுமானாலும் இப்பொழுதே துவங்குவதற்கும்—நவீன கான்யூட் அரசரிடமிருந்து கட்டளை பிறந்தால் போதும்—காங்கிரசுக் கட்சியினர் துவங்கத் தயாராக இருக்கின்றனர். அதற்கான செலவுக்குப் பெரும் பொருள்தர ஆலைச் சீமான்கள் பலர் உள்ளனர். அவ்வியக்கத்தின் அருமை பெருமைகளை விளக்கி எழுதிக் காட்ட எத்தனையோ பேராசிரியர்கள் உள்ளனர். அதை நாட்டு மக்களுக்கு பொருள் விரித்துக்கூற எத்தனையோ நாவலர்கள் உள்ளனர். இவ்வளவையும் படம் பிடித்துப் போட்டு உலகத்தவருக்கு உணர்த்த தேசிய ஏடுகள் நிரம்ப உள்ளன.

ஆனால்? விளைவு?

நவீன கான்யூட் அரசர் நூறு கான்யூட் அசராக உருப்பெறுவதுதான் கைமேல் கிடைக்கக் கூடிய பலன். அதைத் தவிர, மக்களின் சுயமுயற்சி அன்றும் போல்தான் இதன் பிறகும் இருந்திடும்.

எப்படியும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படை ஏற்பாடுகளை நிறைவேற்றியே ஆகவேண்டும்—நிறைவேற்றியே தீருவேன், என்று நவீன கான்யூட் அரசர் கூறும் சொல்லில், உறுதிப்பாடு மட்டுமே இருப்பதாக எண்ணிவிடக் கூடாது. கவிதை கான்யூட் மன்னனிடம் காணப்பட்ட அகந்தையும் அடங்கி இருப்பதைக் காணவேண்டும்.

எனவே, நவீன கான்யூட் அரசர் வேடத்தை இந்தியப் பிரதமர் துறக்கவேண்டும்.

அவர் துறப்பாரா? அவர் துறக்க விரும்பினாலும், அதைச் செயலாற்ற அவரால் இனி இயலுமா?

'அந்நியச் செலாவணி பற்றாக்குறை இன்னும் 25 ஆண்டுகட்கு இருக்கும்'

'இந்தியாவில் அந்நியர் முதலீடு வசதி வேண்டும்'

வட நாட்டுத் தொழில் அதிபர் பிர்லா கூறுகிறார்

பம்பாய், நவ. 21—

இந்தியத் தொழில் தூதுக் குழுவின் தலைவராக வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய பிர்லா, பம்பாயில் நிருபர்களிடம் பேசுகையில், "வெளிநாட்டு உதவியை அதிகமாக இந்தியா பெறாமல், தொழில் முன்னேற்றத்தை வேகமாக அடைந்துவிட நிச்சயமாக முடியாது" என்று கூறியுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், 'அந்நியர்கள் இந்தியாவில் முதலீடு செய்ய சாதகமான நிலையை ஏற்படுத்த வேண்டும்' என்றும் கூறினார்.

'அந்நியச் செலாவணி பற்றாக்குறை இன்னும் 25 ஆண்டுகளுக்கு நீடிக்கும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளில் தன்னுடைய சுற்றுப்பயணத்தின்போது நல்ல ஆதரவைக் கண்டதாகவும் தேசியமயமாக்கும் திட்டம்பற்றி அந்நியர்கள் கொண்டிருந்த சந்தேகங்கள் தவிர்க்கப்பட்டன என்றும், வெளிநாடுகளின் ஆதரவு இந்தியாவுக்கு தொழில்துறையில் அதிகம் கிடைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கேரளத்தில் சேரி ஒழிப்புத் திட்டம்

டெல்லியின் நிதி உதவி

புதுடில்லி, நவ. 9—

கண்ணனூர் நகரசபைப் பகுதிகளில் சேரி ஒழிப்பு நடத்துவதற்காக கேரள சர்க்கார் வகுத்துள்ள திட்டத்திற்கு இந்திய சர்க்கார் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அத்திட்டத்திற்கான செலவு மதிப்பு ரூ. 1,32,000 ஆகும்.

இவ்வாண்டு ஆரம்பத்தில் ஆலப்புழை, திருவனந்தபுரம் ஆகிய நகரசபைப் பகுதிகளில் சேரிகளை ஒழிப்பதற்காக ரூ. 12,01,200 செலவில் 364 கட்டடங்கள் கட்டும் பொருட்டு, கேரள மாநிலத்திற்கு இரண்டு திட்டங்களுக்கு இந்திய சர்க்கார் அனுமதியளித்தார்கள்.

பன்னு வைரச்சுரங்கங்கள்

சர்க்கார் ஏற்பது பற்றி பரிசீலனை செய்யப்படுகிறதாம்

புதுடில்லி, நவ. 21—

இந்திய சர்க்கார், மத்தியப் பிரதேசத்திலுள்ள பன்னு வைரச் சுரங்கங்களைப் பொறுப்பேற்பது பற்றிய யோசனையைப் பரிசீலனை செய்து வருகிறதாம்!

"இந்த சுரங்கங்களில் வேலை நடத்துவதற்கு என்ன முறையை கையாளப்பட வேண்டும்; கார்ப்பரேஷன் ஏற்படுத்தப்பட வேண்டுமா அல்லது வேறுவிதமான நிறுவனம் தகுதியுள்ளதா என்பதுபற்றிக் கூறுவதற்கு இன்னும் உரிய காலம் வரவில்லை' என்று, கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், மாநிலங்கள் சபையில், அமைச்சர் கே. டி. மாளவியா தெரிவித்துள்ளார்.

மோட்டார் வரிச் சட்டம்

தெலிங்கானாவுக்கும் விரிவாக்கப்படும்

ஐதராபாத், நவ. 20—

தெலிங்கானா பகுதியில் இப்போது மோட்டார் வாகனங்களுக்கு விதிக்கப்படுகிற 'டோல் கேட்' கட்டணம் சீக்கிரமே ஒழிக்கப்படும் என்றும், ஆந்திரப் பிரதேச மோட்டார் வரிச் சட்டத்தைத் தெலிங்கானா பகுதிக்கும் விரிவாக்க உத்தேசித்திருப்பதாகவும், ஸ்தலதாபன மந்திரி பிரமானந்த ரெட்டி, சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில், பஞ்சாயத்துகள் இந்த 'டோல் கேட்' கட்டண வசூலை நிறுத்துமாறு கேட்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

70 வயதான அனாதைகளுக்கு

ஆயுள்வரை உபகாரச் சம்பளம்!

உ. பி. சர்க்கார் முடிவு

அலகாபாத், நவ. 20—

70 வயதுக்கு மேற்பட்ட அனாதைகள், உ. பி. மாநிலத்தில் ஓராண்டுக்குமேல் தங்கியவர்களானால், அவர்களுக்கு ஆயுள்பரியந்தம் உபகாரச் சம்பளம் (பென்ஷன்) தருவது என்று சர்க்கார் முடிவு செய்திருப்பதாகவும், வரும் ஜனவரி 26-ந் தேதி 'குடியரசு நாளி'லிருந்து இந்தப் பாதுகாப்புத் தரப்படும் என்றும் சர்க்கார் அறிவித்துள்ளது.

பாலாறு பால வேலைகள் தாமதமாவதேன்?

காரணம் கூறுகிறார் அமைச்சர்

புதுடில்லி, நவ. 21—

வடஆற்காடு மாவட்டத்தில் பாலாற்றின்மீது பாலம் கட்டும் வேலை 1958-ல் பூர்த்தியடையுமாம்.

மழையின் காரணமாகவும், சில அவசியப் பொருள்கள் கிடைக்காத காரணத்தினாலும், வேலை தாமதமாகி வருகிறதாம்.

மக்கள் சபையில் மத்திய அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆயுதப் பரிகரணக் குழு

புதிய ஏற்பாட்டிற்கு ரஷ்யா எதிர்ப்பு

குழுவை விரிவாக்க வேண்டும் என்ற ரஷ்யத் தீர்மானம் தோல்வி

நியூயார்க், நவ. 19—

ஆயுதப் பரிகாரணக் குழுவின் அங்கத்தினர்களை 11 பேரிலிருந்து 25 பேர்களாக்குவது என்று ஐ. நா. சபை முடிவு செய்திருக்கிறது; என்றாலும், 'பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள மாட்டோம்' என்ற ரஷ்யாவின் முடிவை மாற்ற இந்த ஐ. நா. தீர்மானத்தால் ஆகவில்லை.

25 பேர்களாக்குவது என்ற புதிய உத்தேசம் தனது சர்க்காரால் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்றும், அதனால், குழுவின் வேலைகளில் அது பங்கெடுத்துக் கொள்ளாது என்றும் ஐ. நா.-வில் உள்ள ரஷ்ய உதவி வெளி விவகார மந்திரி குஜ்நெட்சாவ் தெரிவித்திருக்கிறார்.

இதையும் பொருட்படுத்தாமல், 82 பேர்கொண்ட ஐ நா. பொதுச் சபையில், உத்தேசத்திற்கு ஆதரவாக 60 வாக்குகளும், எதிராக 9 வாக்குகளும் பதிவாகியுள்ளன; 11 நாடுகள் நடுநிலை வகித்துள்ளன.

தீர்மானத்தின்படி, பாதுகாப்புக் குழுவில் உள்ள 11 நாட்டுப் பிரதிநிதிகளுடன் அர்ஜென்டைனா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், பிரேசில், பர்மா, செக்கோஸ்லேவேக்கியா, எகிப்து, இந்தியா, இத்தாலி, மெக்சிகோ, நார்வே, போலந்து, டுனீஷியா, யூகோஸ்லேவியா ஆகிய 14 நாட்டுப் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பது ஏற்பாடு.

தீர்மானத்தை முன்மொழிந்தவர்கள் கனடா, ஜப்பான், இந்தியா, சுவீடன், பாராகுவே ஆகிய நாட்டுப் பிரதிநிதிகள். இவர்கள், கிழக்கு-மேற்கு நாடுகளிடையே ஒரு உடன்பாடுகாண முயற்சித்துத் தோல்வி கண்டனர்.

இந்தத் தீர்மானத்திற்கு முன்பாக ரஷ்யா, இப்போதுள்ள குழுவையும், 5 பேரடங்கிய உபகுழுவையும், கலைத்துவிட்டு 32 பேரடங்கிய நிரந்தரக் குழு அமைக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தது; ஆனால் அது ஒன்பது வாக்குகளை ஆதரவாகவும், 46 வாக்குகளை எதிராகவும் பெற்றுத் தோல்வியுற்றது; 24 நாடுகள் நடுநிலைமை வகித்தன.

7,500 சிந்திரி தொழிலாளருக்கு ரூ.16 லட்சம் போனஸ்

சிந்திரி, நவ. 20—

சிந்திரி உர உற்பத்தித் தொழிற்சாலையில் பணிபுரியும் சுமார் 7,500 ஊழியர்களுக்கு 'அட்ஹாக்' பட்டுவாடாவாக ரூ. 16 இலட்சம் வரை தருவது என்று தொழிற்சாலையின் டைரக்டர்களும், டெல்லி சர்க்காரும் முடிவு செய்திருக்கின்றனராம்.

தொழிலாளர் சங்கக் கோரிக்கையின் பேரிலேயே இந்த முடிவு மேற்கொள்ளப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஓராண்டு 'சர்வீஸ்' உடையவர்களுக்கும் இந்தத் தொகை கிடைக்கும் என்றும் மொத்தமாக ரூ. 12 இலட்சம் ரொக்கமாகத் தரப்படும் என்றும், எஞ்சிய ரூ. 4 இலட்சம் பிராவிடண்ட் நிதியில் சேர்க்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் ரூ. 100 கிடைக்கும் என்றும், அதிகப்பட்சமாக ரூ. 325 நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது.

இந்தி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்

வேலை துவங்கிவிட்டதாக அமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 21—

"இந்தி பேசப்படாத மாநிலங்களில் இந்தி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை ஏற்படுத்தும் திட்டம் அமுலாக்கப்பட்டதா?" என்று மாநிலங்கள் சபையில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு, இத்துறையில் வேலை துவங்கிவிட்டது என்றும், மைசூரில் இத்தகைய இரண்டு கல்லூரிகள் வேலைசெய்து வருகின்றன என்றும் அமைச்சர் கே. எல். ஸ்ரீமாலி தெரிவித்தார்.

தமிழகக் கைத்தறி நெசவாளருக்கு வேண்டுகோள்

அருப்புக்கோட்டை நெடும்பாவு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் கீழ்க் காணும் அறிக்கையை விடுத்துள்ளார்:—

ஆங்கில ஆதிக்கத்தின்போது அந்நியத் துணிகளின் இறக்குமதிப் பெருக்கத்தால் அழியத் தொடங்கிய கைநெசவுத் தொழில், வடவர் ஆதிக்கம் வந்த பிறகு, உள்நாட்டு ஆலைப் பெருக்கத்தால் படுமோசமான நிலைமையை அடைந்தது.

ஆங்கில ஆதிக்கத்தில் விண்ணப்பங்கள் கொடுத்து, பாதுகாப்புக் கோரிக்கொண்டிருந்த கைநெசவாளர்கள், வடவர் ஆதிக்கம் வந்தபிறகு, கைத்தறிப் பாதுகாப்புக்காக நேரடி நடவடிக்கைகளில்—போராட்டங்களில் இறங்கினார்கள்.

அதன்பிறகுதான், இப்போதுள்ள கருணாமூர்த்திகளின் சர்க்கார், ஆலைத் துணிகளுக்கு 'செஸ்' வரி விதிக்கவும், கைத்தறித் துணிக்கு 'ரிபேட்' கழிக்கவும் உத்தரவு செய்தார்கள்.

இத்தகைய 'ரிபேட்' திட்டம் கைத்தறிக்கு நிலையான பாதுகாப்பு என்றோ, கைத்தறியாளரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடியது என்றோ எவரும் கூற முடியாது.

ஆயினும், பட்டினியால் தெருக் கோடிகளில் செத்துக்கொண்டிருந்த கைத்தறியாளருக்கு—கால் வயிற்றுக் கஞ்சிக்கு—இந்தத் திட்டம் வழி செய்தது. கேட்பாரற்றுக் கிடந்த கைத்தறித் துணிகள் ஓரளவு செலவாகவும் வழி பிறந்தது.

இதைக் கண்ட கைத்தறியாளர்கள் பூரித்துப் போனார்கள்! 'அரசாங்கம் தற்காலிகமாகவே இந்த 'ரிபேட்' திட்டம் செய்திருக்கிறது' என்று தெரிந்துங்கூட, நிலையான பாதுகாப்புத் தருவதற்கு அவகாசம் வேண்டும் என்றே தற்காலிகமாக 'ரிபேட்' திட்டம் கொண்டுவந்திருப்பதாக கைநெசவாளர்கள் நம்பிக்கொண்டார்கள்!

இந்த நிலைமையில், அரசாங்கத்தின் போக்கு என்ன? 9 சதவீதம் கொடுத்துவந்த 'ரிபேட்'டை—1957 டிசம்பர் முதல் 6 சதவீதமாகக் குறைக்கப்போவதாக அறிவித்துள்ளது, அரசாங்கம்!

"1958 மார்ச். ஏப்ரல் மாதங்களில் 'ரிபேட்' திட்டமே எடுபட்டுப்போகும்" என்று, விஷயந் தெரிந்த வட்டாரங்களில் பேசப்படுகிறது!

சர்க்கார் எதற்காக 'ரிபேட்'டைக் குறைக்கிறது? 1958-ல் 'ரிபேட்'டை எடுபடச் செய்வது ஏன்? மாற்றுத் திட்டம்—நிலையான பாதுகாப்புத் திட்டம் ஏதாவது இருக்கிறதா? 'ரிபேட்' திட்டத்தால் கைத்தறிக்கு யாதொரு பயனும் ஏற்படவில்லை; முன்போலவே, கைத்தறியாளன் பட்டினியால் செத்துக்கொண்டிருக்கிறான். எனவே, 'ரிபேட்' திட்டத்தைக் கைவிடுகிறோம் என்று கூற முடியுமா?-என்பனபோன்ற கேள்விகளைக் கைநெசவாளர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், "எந்த ஒரு சாதாரண உரிமையைப் பெற வேண்டுமானாலும் பிரும்மாண்டமான போராட்டம் நடத்தியே பெற வேண்டும்" என்கிற கொள்கைகளை மக்களுக்கு வழங்கிவரும் வடவர் சர்க்கார், மேற்கண்ட தறிக்காரர் கேள்விக்குச் சரியான விடை கூறவா செய்யும்?

"கேள்விக்கு விடை வேண்டுமா? அதற்கும் ஒரு போராட்டம் நடத்து"—என்பதுபோல், கேளாக்காதை முன்வைத்துக் கொண்டிருக்கிறது!

கைத்தறிக்கு நிலையான பாதுகாப்பு — நம்பிக்கையான பாதுகாப்பு—இருக்க வேண்டுமானால், அது, ஆலைத் துணி உற்பத்தியை வரையறை செய்து, கைத்தறித் துணி உற்பத்திக்கு எவ்வித வரையறையும் இல்லாமல் செய்வதேயாகும்.

ஆலைத் துணி வரையறை என்பது—ஆச்சாரியார் கூறியதுபோல்—கரையுள்ள துணிகளை ஆலைகளில் உற்பத்தியாகாமல் தடுப்பது அல்ல; அப்படிச் செய்தால், அச்சடித்த துணிகளின் போட்டியை எதிர்க்க முடியாமல் போய்விடும்.

எனவே, உண்மையான கைத்தறிப் பாதுகாப்புச் செய்ய வேண்டுமானால், ஆலைகளில் 30 அங்குல அகலத்திற்குமேல் துணி உற்பத்தியாகாமல் தடை செய்ய வேண்டும்.

இப்போதுள்ள வடவர் சர்க்கார் இப்படிச் செய்ய முன் வருமா? நீண்ட காலப் போராட்டத்திற்குப் பின்பு கிடைத்த 'ரிபேட்' திட்டத்தையே ஒழித்துவிட்டு, கைத்தறிக்காரனை ஏமாற்ற விரும்பும் அரசாங்கம், நிலையான பாதுகாப்புத் தருமென்று எப்படி நம்ப முடியும்?

ஆயினும், 'முயற்சி திருவினை ஆக்கும்' என்ற வள்ளுவன் வாக்குப்படி, கைநெசவாளர்கள் அனைவரும் சாதி — மத — அரசியல் பேதங்களை மறந்து, மாபெரும் தேசியக் கைத்தொழில் ஒன்றைப் பாதுகாப்பதற்காகப் போராட்டத்தில் ஈடுபட வேண்டியது அவசியம்.

1. ஆலைகளில் 30 அங்குலத்துக்கு உட்பட்ட அகலமுள்ள துணிகளைத் தயாரிக்கச் செய்ய வேண்டும்.
2. அதுவரை 'ரிபேட்' திட்டத்தை நீடிக்கும்படிச் செய்ய வேண்டும்;

ஆகிய திட்டங்களை வலியுறுத்தி, ஆங்காங்குள்ள நெசவாளர் சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றி டெல்லி அரசாங்கத் தொழில் அமைச்சருக்கும், சென்னை மாநிலத் தொழில் அமைச்சருக்கும் அனுப்ப வேண்டுகிறேன்.

'இந்தி இஷ்ட பாடமாகவும் வேண்டாம்'

மேக்கிரிமங்கலம்பஞ்சாயத்துபோர்டுகண்டனம்

21-10-57 பகல் 2-30 மணிக்கு மேக்கிரிமங்கலம் பஞ்சாயத்து போர்டின் சாதாரணக் கூட்டம் மேற்படி பஞ்சாயத்தின் தலைவர் கோ. சி. மணி அவர்கள் தலைமையில் கூடி, மத்திய அரசாங்கத்தார் கொண்டுவரும் கட்டாய இந்தியை எதிர்த்து, அது இஷ்டப் பாடமாகக்கூடத் தமிழ் நாட்டிற்கு கொண்டு வரப்படக்கூடாது என்ற கண்டனத்தை மத்திய அரசாங்கத்துக்குத் தெரிவிக்க ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

டாடா நிறுவனத்திற்கு 3¼ கோடி டாலர் கடன்

உலக பாங்கி தருமாம்

வாஷிங்டன், நவ. 21—

டாடா இரும்பு—உருக்கு கம்பெனிக்கு உலக பாங்கி 3¼ கோடி டாலர் கடன் தருவது பற்றி இன்று அறிவிக்கப்படும்.

குழந்தை வளர்ப்புப் போட்டி

சத்தியவாணிமுத்து தலைமையில் விழா

நகர இளைஞர் கழகத்தின் சீரிய முயற்சி

25—10—57 மாலை சென்னை-சூளையில் நகர இளைஞர் கழகச் சார்பில் 13-ம் ஆண்டு சுகாதார வார விழாவின் மகளிர் தினமும், குழந்தை வளர்ப்புப் போட்டியும் நடைபெற்றன. குழந்தை வளர்ப் போட்டியில் 33 குழந்தைகள் கலந்துகொண்டன. டாக்டர் பி. இராசலட்சுமி, டாக்டர் திருமதி கிருஷ்ணசாமி இருவரும் முதல் நான்கு குழந்தைகளைப் பரிசிற்கு உரியவையெனத் தேர்ந்தெடுத்தனர்.

செயலாளர் ஆதி. தேவநாதன் வரவேற்புக்குப்பின், விழாவிற்குத் தலைமைதாங்கிய திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் பரிசுகள் வழங்கியபின், தாய்மார்களின் கடமைகள், குழந்தை இன்பம், குழந்தை வளர்ப்பு, நாட்டு நலன் முதலியவற்றை விளக்கி, இவ் விழாவைச் சிறந்த முறையில் ஆண்டுதோறும் திறமையுடன் நடத்திவரும் நகர இளைஞர் கழகத்தையும் பாராட்டிப் பேசினார்கள்.

சுகாதார (இலவச)ப் பொருட்காட்சி

மறுநாள் 26—10—57 காலை 8-30 மணிக்கு, சென்னை மேயர் கே. என். சீனிவாசன் அவர்களால் பொருட்காட்சி, சூளை இந்து யூனியன் கமிட்டி பள்ளியில் திறந்துவைக்கப்பட்டது. சென்னை அரசாங்க சுகாதார இலாகாவினர், சென்னை நகராண்மைக் கழக சுகாதார இலாகாவினர், இந்து குஷ்ட நிவாரண சங்கத்தினர், செஞ்சிலுவை சங்கத்தினர், பிரிட்டிஷ் செய்தி நிலையத்தினர் ஆகியோர் இப்பொருட்காட்சியில் சிறப்புறப் பங்கெடுத்துக் கொண்டனர். இடையிடையே சென்னை பர்மாஷெல் கம்பெனியாரின் படக்காட்சி இலாகாவின் படக்காட்சியும் நடைபெற்றது. இப்பொருட்சியையொட்டி, டாக்டர் கிருஷ்ண நாயர், டாக்டர் இராஜாமணி அம்மையார், டாக்டர் ஓ. தேவராசன் ஆகிய தேர்ச்சியும் அனுபவமும் பெற்ற டாக்டர்களைக் கொண்டு 130 நபர்களுக்கு பலவகையான உடற் பரிசோதனைகள் இலவசமாகச் செய்யப்பட்டன.

நுங்கம்பாக்கம் சமூக ஊழியர் மன்ற ஆண்டுவிழா

அண்ணா, ஆசைத்தம்பி, சத்தியவாணிமுத்து கலந்துகொண்டனர்

சென்னை, நவ. 18—

சென்னை 34-வது வட்டம் காமராசபுரம்—வைகுண்டபுரம் சமூக ஊழியர் மன்றத்தின் மூன்றாவது ஆண்டுவிழா, நேற்றுமாலை, நுங்கம்பாக்கம் நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி விளையாட்டுத் திடலுக்கு அருகில், மின்ஒளி விளக்குகளால் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையில் நடைபெற்றது.

தோழர்கள் சேலம்-சீனிவாசன், நவநீத கண்ணன் ஆகியோரின் இன்னிசைக்குப்பின் பொதுக்கூட்டம் துவங்கியது. தோழர் எஸ். கே. வீரராகவன் மன்றத்தின் சார்பில் அனைவரையும் வரவேற்றார்.

தோழர் இரா. சம்பந்தம் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் சமூக ஊழியர் மன்றம் தேர்தல் காலத்தில் ஆற்றிய சீரிய பணிகள் குறித்தும், குடிசை வாழ்மக்களுக்கு அது செய்தளித்த சுகாதார வசதிகள் குறித்தும் விளக்கிப் பாராட்டினார்.

துவக்கத்தில் தோழர் வ. சங்கரநாராயணன் பேசுகையில், தி. மு. கழகக் குறிக்கோள்களை விளக்கி இந்தித் திணிப்பைக் கண்டித்தார்.

அடுத்து தோழர் க. முருகேசன் பேசுகையில், தேசிய கௌரவப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றிய சென்னை அரசினரின் போக்கை வன்மையாகக் கண்டித்தார்.

பின்னர், தோழர் தி. சு. கிள்ளிவளவன் பேசுகையில் சமூக ஊழியர் மன்றத்தின் கடந்தகால பணியினையும், குடிசை வாழ் மக்கள் இன்று அனுபவித்துவரும் அவதி குறித்தும் விளக்கி, வட்டத்திலுள்ள சில குறைபாடுகளை எடுத்துக்காட்டி, குறைகளைத் தவிர்க்க நகரசபை உறுப்பினர்கள் முன்வாராதது குறித்து வருத்தம் தெரிவித்தார்.

தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் பேசுகையில், தொகுதியிலுள்ள காமராசபுரம் போன்ற சேரிகள் சீர்கேடுற்ற நிலையில் இருப்பதையும், குடிசை வாழ் மக்களின் அவலநிலையையும் விளக்கி, தக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு சர்க்காருக்கு அறிவுறுத்திவிட்டு, தொடர்ந்து பேசுகையில் கழக இலட்சியத்தையும் திராவிட நாடு பிரியவேண்டிய அவசியத்தையும், திராவிட நாடு பிரிந்தால் என்னென்ன நன்மைகள் ஏற்படும் என்பதையும் விளக்கினார்.

அடுத்து, திருமதி சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில், சட்டமன்ற நடவடிக்கைகளை விளக்கியதுடன், தேசிய கௌரவப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்த நேரத்தில் தி. மு. கழகம் நடந்துகொண்ட விதத்தையும், மற்ற எதிர்க்கட்சிகள் பேசிய போக்கினையும் விளக்கி இந்தியை எதிர்க்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார்.

இறுதியாக அண்ணா அவர்கள் பேசுகையில், தேசிய கௌரவப் பாதுகாப்பு மசோதா விவாதத்தின்போது, அமைச்சர்கள் நடந்துகொண்ட போக்கினையும், பெரியாருக்கும்—தி. மு. கழகத்தாருக்கும் இடையே உள்ள நிலை குறித்தும் விளக்கினார்கள்.

அண்ணா அவர்களுக்கும், மற்றப் பேச்சாளர்களுக்கும் சமூக ஊழியர் மன்றம், 34-வது வட்ட தி. மு. க. கிளை, 36-வது வட்ட தி. மு. க. கிளை, கிராமத்தெரு மறுமலர்ச்சி மன்றம், இளைஞர் மறுமலர்ச்சி மன்றம், மறுமலர்ச்சி மன்றப் படிப்பகம், வள்ளுவர் படிப்பகம், 35-வது வட்ட அறிவு வளர்ச்சி மன்றம் ஆகியவை சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. தோழர் எம். ஜி. துரை சார்பில் அண்ணாவுக்கு ஒரு கைத்தறித் துணியாலான சட்டையும், அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் ஓர் பொடி டப்பியும் அளிக்கப்பட்டன.

அண்ணாவின் அரிய உரைக்குப் பிறகு கூட்டம் இரவு 9-15 மணிக்கு நன்றிகூறலுடன் இனிது முடிவுற்றது.

வள்ளுவர் படிப்பகப் பணிமனைத் திறப்பு விழா

அன்றுகாலை 8 மணிக்கு, நுங்கம்பாக்கம் வள்ளுவர் படிப்பகப் பணிமனைத் திறப்புவிழா, தோழர் இரா. சம்பந்தம் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. அவர்கள் கழகக் கொடியை ஏற்றி வைத்து, பணிமனையைத் திறந்து வைத்தார். தோழர்கள் மா. செங்குட்டுவன், தி. சு. கிள்ளிவளவன், வ. சங்கரநாராயணன், அழகரசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இந்தி திணிப்பை எதிர்த்து வீராங்கனைகள் முழக்கம்

வடசென்னையில் மாபெரும் பெண்கள் கூட்டம்

13—11—57 மாலை, சென்னை—வண்ணை இளைஞர் முன்னேற்ற மன்றத்தின் சார்பிலுல், மணி கண்டமுதலி 6-வது தெருவில், பெண்கள் இந்தி எதிர்ப்புக் கூட்டம் டாக்டர் வெற்றிச்செல்வி-அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. அவர் தம் தலைமை உரையில், இந்தியை எதிர்க்க வேண்டிய அவசியம் பற்றியும், சென்னை சர்க்காரின் அடிமைத்தனத்தைப் பற்றியும், இந்தி தமிழ் நாட்டில் கட்டாயமாகப் புகுத்தப்படுமானால், அது வெறும் மொழிப் போராட்டமாக மட்டும் இல்லாமல், நாட்டு விடுதலைப் போராட்டமாக முடியும் என்று எச்சரித்தும், அப்படி நடக்கும் போராட்ட காலத்தில், வீட்டுக்கொரு வீராங்கனை நாட்டு மொழியைக் காத்திட வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அடுத்து, தோழியர்கள் லீலாமணி-சுந்தரராசன், லோகநாயகி, ஜெகஜோதி-நாகராசன், வேலூர் தேசியமணி-கண்ணன் மாணவி சற்குணம் ஆகியோர் பேசினர்.

பின்னர், டாக்டர் சத்தியவாணி-முத்து எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில், "இந்தி, தமிழ் நாட்டில் புகுந்தால், அதை எதிர்ப்பதற்குப் பெண்கள்தான் முன் நிற்பார்கள்" என்று குறிப்பிட்டு, சுமார் 1 மணி நேரம் விளக்கவுரை ஆற்றினார்.

கூட்டத்தில், மூலக்கொத்தளம் தாளமுத்து-நடராசன் படிப்பகத் தோழர்களால் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களுக்குக் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

முடிவில், தோழியர் எஸ். பி. சற்குணம் அவர்களால் கீழ்க்கண்ட தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன:—

வடநாட்டு ஏகாதிபத்தியம் வஞ்சகமாக திராவிடத்தின்மீது, இந்தியைத் திணிக்கும் முறையை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், தமிழர்களின் எண்ணத்துக்கு மாறாக—வலுக்கட்டாயமாக இந்தியைத் திணிக்க முயற்சித்தால் தமிழர்கள் ஒன்று திரண்டு எதிர்க்க வேண்டுமென்று இக்கூட்டம் தமிழ்ப்பெருமக்களைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

வண்ணை தட்சிணாமூர்த்தி ஆலயத்தில், 'தமிழனுக்கு சிறந்த தனிமொழி உண்டோ?' என்ற வாசகம் தமிழர்களை இழிவுபடுத்தும் முறையில் எழுதப்பட்டுள்ளதைக் கண்டிப்பதுடன், உடனே அத்தகைய வாசகத்தை நீக்க வேண்டுமென்று கோயில் டிரஸ்டியாக உள்ள திருமதி ஜோதி-வெங்கடாசலம் எம்.எல்.சி. அவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகின்றது.

பெரிய மதியாக்கூடலூர் தி.மு.க. பொதுக்கூட்டம்

11—10—57-ல் பெரிய மதியாக் கூடலூர் தி. மு. க. கிளை சார்பில் கன்னிவாடி கே. என். எஸ். பெரியார் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் டி. கே. பெரியசாமி, பரமத்தி-சண்முகம் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர். கடந்த சில தினங்களுக்குமுன் களவாடப்பட்ட கொடிக் கம்பம் இருந்த இடத்திலும், கழகப்பணி மனையிலும் தலைவரால் கொடியேற்றுவிக்கப்பட்டது.

35,000 தொழிலாளர் வேலைநிறுத்தம்

இலங்கை சர்க்கார் இறங்கிவருகிறது

சம்பளக் கமிஷன் நியமிக்க சம்மதம் என்கிறார் பண்டா

கொழும்பு, நவ. 21—

இலங்கையில், இரயில்வே, துறைமுகம், மற்றும் சர்க்காருக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் இவற்றைச் சேர்ந்த சுமார் 35,000 தொழிலாளர்கள், நேற்று இரவு முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இன்னும் மின்சார இலாகாவைச் சேர்ந்த பலரும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்; விளைவாக, கொழும்பு, மற்றும் சுற்றுப்புறங்களுக்கு 5 மணி நேரம் வரை மின்சாரம் கிடைக்கவில்லை.

பிறகு, பிரதம மந்திரி தலையிட்டு, இடைக்கால நிவாரணம் முதலிய சில கோரிக்கைகளை ஈடேற்றுவதாக உறுதி கூறி, ஒரு பகுதித் தொழிலாளர்களை வேலைக்கு அனுப்பிவைத்திருக்கிறார்.

சமரச முயற்சி

வேலைநிறுத்தம் பற்றி இன்று பிரதமர் பண்டாரநாயகா, தொழிற் சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். சமரசத்திற்கு வரும் நோக்குடன் அவர், சம்பளக் கமிஷன் ஒன்று நியமிக்கவும், இடைக்காலத்தில் தற்காலிகமாக நிவாரணம் அளிக்கவுமாக ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கவும் சம்மதம் தெரிவித்திருக்கிறார்.

சென்னையில் அண்ணா விளக்கவுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காட்டிப் பேசினேன்; இன்னும், 'மார்பைப் பிளந்து காட்ட வேண்டுமென்றாலும் தயாராயிருக்கிறேன்' என்று கூடச் சொன்னேன்.

"'இவர்கள் 15 பேர் மட்டுமே இருக்கிறார்கள்?-என்ற எண்ணத்தில்தான் சிலர் கொக்கரித்தார்கள். அமைச்சர் பேசும்போது, மிக ஆவேசமாக, 'இதோ, இவர்கள் முகமூடியைக் கிழித்தெறிந்து விட்டோம்' என்று கூறினார்; பேசிவிட்டு எங்கே பார்த்தார் தெரியுமா? பத்திரிகை 'ரிப்போர்ட்டர்'களைத்தான் பார்த்தார். அப்படி என்றால் என்ன அர்த்தம்? 'அண்ணாத்துரை பேச்சை ஏதோ பெரிதாக நினைத்துக்கொண்டு அதிகமாகப் போட்டுவிடாதே; நான் பேசும் இந்தப் பேச்சைப் போடு'—என்பதுதான் அவர் பார்த்ததற்குப் பொருள்!

"அவர்கள் 150 பேர்; அந்த 150 பேர்களிடையே இந்த 15 பேருக்கு எங்கிருந்து தைரியம் வந்தது—என்று கேட்பார்கள் சிலர், 'அதுவும் நடிப்பு' என்பார்கள்; நடிப்பு என்றாலும் நல்ல நடிப்பைப் பாராட்டுங்களேன்!

"நாங்கள் எடுத்த முடிவு, எங்கள் நெஞ்சத்தைத் தொட்டுப் பார்த்த முடிவு; பிறர் முகத்தைப் பார்த்து எடுத்ததல்ல! இந்த முடிவை எடுக்க எத்தனைமுறை நாங்கள் கூடி, ஒருவரையொருவர் சந்தித்துப் பேசியிருப்போம்! பலர் கூறிய கருத்தையும் கலக்கிப் பார்த்துதான் இந்த முடிவுக்கு நாங்கள் வந்தோம்!

"சபையில் பேசிமுடிந்த பிறகு தனியாகச் சந்தித்தபோது நிதியமைச்சர் சுப்பிரமணியம் கூட என்னைப் பார்த்துச் சொன்னார்— "You have given your good heart to a bad Cause" என்று!

"'பெரியாரின் எண்ணம் சரி; கடைப்பிடிக்கும் முறைதான் தவறு'—என்பதைத்தான் நான் எடுத்துச் சொன்னேன். கடைசியில் அமைச்சரும் அதை ஒப்புக்கொள்ளும் அளவுக்குப் பேசினார்.

"நான், என்னுடைய கருத்தை யார் ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும், கவலைப்படாமலே சொல்லிவருகிறேன். திராவிடர் கழகத்திலிருந்தபோதே நான் தனிக்குரல் எழுப்பினேன். 1947-ம் ஆண்டு 'சுதந்தர' தினத்தை துக்கநாளாகக் கொண்டாடவேண்டுமென்று, பெரியார் அவர்கள் யாரையும் கலக்காமல் முடிவு செய்து அறிக்கைவிட்ட நேரத்தில், அந்த முடிவை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று பத்திரிகையில் எழுதினேன்.

"இந்த நேரத்தில் உங்களுக்கு ஒரு இரகசியத்தை வெளியிட விரும்புகிறேன். சுதந்தரதினத்தைக் கொண்டாடவேண்டும் என்ற எனது கருத்தை எழுதி, பத்திரிகையில் அச்சடிக்குமுன், அதை நண்பர் என். வி. நடராசனிடத்தில் கொடுத்து, 'தயவுசெய்து இதை குருசாமியிடம் எடுத்துச்சென்று காட்டி வாருங்கள்' என்று அனுப்பி வைத்தேன்..

"அதை தோழர் குருசாமி படித்தபிறகும், 'பெரியார் செய்த முடிவு முடிவானதுதான்; அதை மாற்ற முடியாது' என்று சொல்லியனுப்பி விட்டார்.

"அப்பொழுது நான் தனி ஆள்; யார் யார் என்னை ஆதரிப்பார்கள் என்று நான் கணக்குப் பார்க்கவில்லை. அந்த நேரத்தில் 'அரசியல் துறவற'த்துக்கும் தயாராயிருந்தேன். என் மனதுக்குச் சரி என்று பட்டது—சொன்னேன்; 'நம்மைப்போல் 4 பேர் சொல்லவில்லையே' என்று கவலைப்படவில்லை.

"நானே நினைத்துக்கொண்டேன்—'பெரியாருக்கு உண்மையான சீடன் நான் தான்'—என்று; ஏனென்றால், அவரும், தனக்குச் சரி என்று பட்டதை தைரியமாக கூறக்கூடியவர். நானும் அந்த நேரத்தில் அப்படித்தான் நடந்துகொண்டேன்.

"நான் இப்பொழுதுகூட, எப்படியோ—மாயாஜாலம், மந்திரஜாலத்தின் மூலமோ—பெரியாரை நேரில் கண்டு பேச நேரிட்டால், 'ஏன் இப்படிப்பட்ட போராட்டங்களில் ஈடுபடுகிறீர்கள்? இது உங்களுக்குக்கூடப் பிடிக்காதே!' என்று நான் கேட்டால், அவர்—என்னுடன் முன்பெல்லாம் நடந்துகொள்ளும் வழக்கப்படி கன்னத்லதக் கிள்ளியோ, முதுகில் அன்போடு அடித்தோ, தலையில் பாசத்தோடு தடவியோ சொல்லுவார் — 'பாவிப் பயலே! நீங்களெல்லாம்தான் போய்விட்டீர்கள்; மிச்சமுள்ளவர்களை வைத்துக்கொண்டு இந்தக் காரியத்தைத்தானே செய்யமுடியும்? எனக்குக் கூட இது பிடிக்கவில்லைதான்; என்ன செய்வது? ஆளுக்குத் தகுந்த வேலைதானே கொடுத்தேன்?'—என்பார்.

"பெரியார் கடைப்பிடிக்கும் முறை தவறு என்பதால், அவரது நோக்கத்தை விட்டுவிடக்கூடாது. அவர் இத்தகையபோராட்டத்தை நடத்துகிற நோக்கம் என்ன என்பதை உணரவேண்டும்—என்று நான் சொன்ன பிறகுதான், காங்கிரஸ்காரர்கள் பயந்து பயந்து, திட்டம் கேட்டார்கள் என்னிடத்தில்; திராவிடர் கழகக்காரர்கள் கூறும் நல்ல கருத்தை நாட்டை ஆளும் சர்க்கார் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்."

கழகக் கூட்டங்கள்

★

சுந்தரப்பெருமாள்கோவில்
மேலவீதியில்
தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா
24—11—57 மாலை 5 மணிக்கு
பேசுவோர் :
கா. அபபாதுரையார்
அலமேலு-அப்பாதுரை

★

ஆம்பூர்
வாரச் சந்தைத் திடலில்
24—11—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
தலைவர் : ஆர். சம்பங்கி எம். சி.
ஏ. கே. வில்வம்
அருண்மொழி

★

தஞ்சை
திலகர் திடலில்
24—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : ஏ. வி. பதி
பேசுபவர் :
மு கருணாநிதி எம்.எல்.ஏ.

★

இராமநாதபுரம் (கோவை)
தி. மு. க. திடலில்
24—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : அ. ஆறுமுகம்
பேசுவோர் :
என். எஸ். இளங்கோ
மு. இராமநாதன்
எஸ். ஏ. இராசமாணிக்கம்

★

சேலம் 18-வது வட்டம்
கழகக் கட்டடத்திற்கு அருகில்
24—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : பி. எஸ். அம்பாயிரம்
பேசுவோர் :
டி. கே. தாமரைச்செல்வன்
சிற்றுளி-சுப்பிரமணியம்
ஈ. ஆர். கிருஷ்ணன்
வி. சிவப்பிரகாசம்

★

பெங்களூர் :
23—11—57 மாலை 3½ மணிக்கு
மினர்வா மில்ஸ் மைதானதில்
இரவு 8 மணிக்கு
பின்னி மில்ஸ் மைதானதில்
பேசுவோர் :
க. அறிவழகன்
நாகை-புகழேந்தி
எஸ். வி. பதி
ஆர். எல். லிங்கராஜ்

★

பெங்களூர் :
சிவன் செட்டித் தோட்டத்தில்
24—11—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
க. அறிவழகன்
நாகை-புகழேந்தி
எஸ். வி. பதி
ஆர். எல். லிங்கராஜ்

காங்கிரஸ் செயலாளருக்கு கவர்னர் பதவி?

புதுடில்லி, நவ. 22—

இப்போது காங்கிரஸ் கட்சியின் செயலாளராக இருக்கும் மாதவன் நாயர் ஒரு மாநிலத்திற்கு கவர்னராக நியமிக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

ஆந்திர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சத்தியநாராயண இராசு காங்கிரஸ் செயலாளர் பதவியை ஏற்கக்கூடுமாம்.

830 சுரங்கங்களில்

3,17,505 பேர் பணியாற்றினர்

புதுடில்லி, நவ. 22—

1957 ஜூலை மாதத்தில் இந்தியாவில் உற்பத்தியான நிலக்கரியின் அளவு 32,96,150 டன்னாகும்; இது, முந்திய மாத அளவைவிட 20,000 டன் குறைவாகும்.

ஜூலை மாதத்தில் 830 சுரங்கங்களில் சராசரி தினசரி 3,17,305 தொழிலாளர்கள் பணியாற்றினராம்!

தெ. ஆ. மாவட்ட

தி.மு.க. செயற்குழு கூட்டம்

"1—12—57 ஞாயிறு பிற்பகல் 2-மணிக்கு, விருத்தாசலம் 'முசாபரி பங்களா'வில் தென் ஆற்காடு மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் மாவட்ட மூன்றாவது அரசியல் மாநாடு சம்பந்தமாக ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.

"இக்கூட்டத்திற்கு மாவட்டப் பிரதிநிதிகள் அவசியம் தவறாது வருகை தருமாறு கேட்டுக் கோள்கிறேன்."

என்று, தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ.கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் அறிவிக்கிறார்.

தஞ்சையில் சிறப்புக் கூட்டம்

இரா. நெடுஞ்செழியன்
கலந்துகொள்கிறார்

24-11-57 காலை 9-மணிக்கு, தஞ்சை இராமநாதன் செட்டியார் மண்டபத்தில், நகர தி. மு. க. நிதிக்காகவும், சேலம் தேர்தல் வழக்கு நிதிக்காகவும் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெறும். தோழர் எஸ். பெத்தண்ணன் தலைமை வகிப்பார். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் 'இலக்கிய இன்பம்' என்ற பொருள்குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

குடந்தை இளங்கோ படிப்பக ஆண்டு விழா

இரா. நெடுஞ்செழியன்
குன்றக்குடி அடிகளார்
கலந்துகொள்வர்

24—11—57 மாலை 6 மணிக்கு குடந்தை பாணாதுறை தெற்கு வீதியில், இளங்கோ படிப்பக முதலாவது ஆண்டு விழா டாக்டர் வி. ஆர். மூர்த்தி தலைமையில் நடைபெறும். தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், திரு. குன்றக்குடி அடிகளார், திரு. எஸ். கணபதி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை 17-வது வட்ட தி.மு.க. செயற் குழு உறுப்பினர்களுக்கு :

24—11—57 காலை 10 மணி அளவில், மேற்படி வட்ட கழக மனையில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். கழக வரவு-செலவு, டன்னி வரவு-செலவு, மற்றும் பல பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

சென்னை 46-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு :

24—11—57 காலை 8 மணிக்கு கழகப் பணிமனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

சென்னை 5-வது வட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்

24—11—57 காலை 8 மணிக்கு சென்னை 5-வது வட்ட தி.மு.க. பணிமனையில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும. அவ்வமயம் பல பிரச்சினைகள் ஆய்வுக்குவரும். தோழர்களனைவரும் கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நக்கீரர் பட்டி மன்றம்

23—11—57 மாலை 6-30 மணிக்கு, சென்னை மணவழகர் மன்றத்தின் சார்பில் பெத்து நாய்க்கன்பேட்டை முருகேச முதலித்தெரு, 2-எண்ணுள்ள இல்லத்தில் திரு. ஒ. மா. செயவேலு தலைமையில் மேற்படி பட்டி மன்றக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் வி. ஆர். சிட்டிபாபு, சிறுவை மோகனசுந்தரம் ஆகியோர் "இருபதாம் நூற்றாண்டு தமிழ்ப் புலவர்கள்" பற்றிப் பேசுவர்,

கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

நவம்பர்

24 : செங்குட்டபாளையம் (பொள்ளாச்சி)

25 : மாலை 4 மணி-பந்தநல்லூர் வரவேற்பு
மாலை 6 மணி-கீழக்காட்டூர் தி. மு. க. துவக்கவிழா

26 : காலை 8 மணி - திருவம்பநல்லூர்
காலை 10 மணி-சோழபுரம் வரவேற்பு
மாலை 4 மணி - அணக்குடி கொடியேற்று விழா
மாலை 6 மணி - அம்மன் பேட்டை பொதுக்கூட்டம் (தஞ்சை மாவட்டம்)

27 : ஆண்டிமடம் (திருச்சி மாவட்டம்)

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் தோழர்கள் புலவர் ஆறுமுகம் ம. கோ. மணி, என். அசோகன், பீ. எ. லிங்கன் கலந்துகொள்வார்கள்.

சேலம் நகராண்மைக்கழக ஊழியர் நாடக சங்க வெள்ளி விழா

24—11—57 காலை 9 மணிக்கு சேலம் பஸ் நிலையத்துக்கருகில் அமைக்கப்பட்டுள்ள பந்தலில் சேலம் நகராண்மைக் கழக ஊழியர்கள் நாடக சங்கத்தின் வெள்ளி விழா நடைபெறும். திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமை வகிப்பார். சேலம் மாவட்ட நீதிபதி திரு. எஸ். நடராசன் விழாவைத் துவக்கிவைப்பார். சேலம் நகராண்மைக் கழகத் தலைவர் பி. மதுரை பிள்ளை மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர். அன்று இரவு 7 மணிக்கு 'அசோகன்' என்னும் நாடகம் நடைபெறும்.

பெரியசாமி-சின்னம்மாள் திருமணம்

24—11—57 காலை 8½ மணிக்கு ஆத்தூர்—நரசிங்கபுரத்தில், திரு. பி. வி. நாராயணன் தலைமையில் தோழர் என். என். பெரியசாமி—தோழியர் எம். சின்னம்மாள் திருமணம் நடைபெறும். தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், எம். பி சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

சென்னை—தூளை நகர இளைஞர் கழகம்

23—11—57 மாலை 6-30 மணிக்கு, மாணிக்கசெட்டிதெரு, 10-எண்ணுள்ள மேற்படி கழக மனையில், தோழர் ஆர். எஸ். பாண்டியன் "சமாதானப் பிரச்சினைகள்" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

விருதுநகர் பெரியசாமி படிப்பக உறுப்பினர்களுக்கு :

24—11—57 இரவு 10 மணி அளவில், விருதுநகர் எம். எஸ். பெரியசாமி படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அது சமயம் புதிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

24—11—57 காலை 9 மணிக்கு சென்னை 16-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் தோழர் ஆண்டவன் தலைமையில் 'ஜனநாயகம்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

24—11—57 காலை 9 மணிக்கு சென்னை 35-வது வட்ட தி. மு. க. பணிமனையில் தோழர் த. ச. மதிவாணன் தலைமையில், 'அரசியல் அலைகள்' என்ற தலைப்பின்கீழ் தோழர்கள் சா. நெடுமாறன், சௌந்திரராசன், குமார், ஆனந்தன் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.